இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 03.02.2026

# ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை இல்லை இல்லை!

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையில் திருக்குறளும் இல்லை. தமிழ்நாடும் இல்லை.

**தமிழ்நாட்டுக்கான எந்தத் திட்டமும் இல்லை. தமிழ்நாட்டுக்கான எந்த சிறப்புத் திட்டமும் இல்லை. மாநிலங்களுக்கான நிதி, பேரிடர் நிதி போன்ற எந்த ஒரு நிதிகளும் தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவில்லை.**

**தேர்தலுக்காகக் கூட எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவும் இல்லை. தமிழ் நாட்டுக்கான ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி கூட அறிவிக்கவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்ட மதுரை எய்ம்ஸ் எப்போது கட்டி முடிக்கப்படும் என்ற அறிவிப்பும் இல்லை.**

தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச்சொற்ப அளவில் இருந்து கூடவும் இல்லை.

ஜல்ஜீவன் குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாடு கோரியிருந்த 3,112 கோடி ரூபாய் ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை. அனைவருக்கும் கல்வி திட்டத்துக்காக தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 3,548 கோடி ரூபாய் விடுவிக்கப்படவில்லை.

பிரதம மந்திரி கதிசக்தி பொருளாதார ரயில் மண்டலங்கள் என்பதில் ஒன்று கூட தமிழ்நாட்டுக்கு இல்லை.

இரயில்வே காரிடார் மேம்பாட்டில், 'சென்னை - ஐதராபாத்' மற்றும் 'சென்னை - பெங்களூரு' என்று இருக்கிறதே தவிர தமிழ்நாட்டுக்குள் எந்த இரயில்வே திட்டமும் இல்லை. தமிழ்நாட்டில் இருந்து மற்ற மாநிலத்துக்குள் தானே தவிர, **தமிழ்நாட்டுக்குள் இல்லை. கோவைக்கு மெட்ரோ ரயில் இல்லை. மதுரைக்கு மெட்ரோ ரயில் இல்லை. திருச்சிக்கு மெட்ரோ ரயில் இல்லை. ஒசூருக்கு விமான நிலையம் இல்லை. திருப்பூர், கோவை, கரூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களின் ஜவுளித் தொழில் துறையினருக்கு நிதிநிலை அறிக்கை ஊக்கமளிக்கவில்லை.**

மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு 41 விழுக்காட்டில் இருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட வேண்டும் என்பதை ஏற்கவும் இல்லை. தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கையை மதிக்கவும் இல்லை.

ஏழைகளுக்கு இல்லை. பெண்களுக்கு இல்லை. விவசாயிகளுக்கு இல்லை. விளிம்பு நிலை மக்களுக்கு இல்லை. எந்தப் பிரிவினருக்கும் எந்த நன்மையும் இல்லை. வேலை வாய்ப்புக்கு எந்தத் திட்டமும் இல்லை. தனிநபர் வருமான வரியில் எந்தச் சலுகையும் இல்லை.

**வரலாறு காணாத அளவுக்கு ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்திருப்பதை அதிகரிக்கத் திட்டமும் இல்லை.**

அமெரிக்க வரி விதிப்பு பயங்கரவாதத்தை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்ற அறிவிப்பும் இல்லை. சரிந்து வரும் பங்குச் சந்தையை மீட்டெடுக்கும் திட்டமில்லை. பங்குச் சந்தையில் முதலீடு செய்த அன்னிய முதலீட்டாளர்கள் வெளியேறி ஓடும் நிலையை தடுக்க முயற்சிக்கவும் இல்லை. ஏற்றுமதி தொழிலைப் பாதுகாக்கக் கூடிய வகையில் எந்த ஒரு அறிவிப்பும் இல்லை.

பெட்ரோல் விலை பற்றிய கவலைகள் இல்லை. டீசல் விலை பற்றி கவலைகள் இல்லை. சிலிண்டர் விலையைப் பற்றி கவலைகள் இல்லை. தங்கம் விலை ஏற்றம் பற்றிய அக்கறை இல்லை. வெள்ளி விலை பற்றிய அக்கறை இல்லை.

முந்தைய நாள் வெளியான பொருளாதார ஆய்வறிக்கையை இவர்கள் படிக்கவுமில்லை. ஆய்வறிக்கையில் மிகச்சிறந்த மாநிலங்கள் என்று பாராட்டப்பட்ட மாநிலங்களுக்கு எந்தத் திட்டங்களும் இல்லை. பொருளாதார ஆய்வறிக்கையில் பிரச்சினைகள் என்று சொல்லப்பட்டவைகளை நிவர்த்தி செய்யும் முயற்சிகளும் இல்லை. இந்தியாவின் உண்மையான பிரச்சினைகளைக் கண்டுகொள்ளவில்லை.

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்களை வலுப்படுத்தக் கூடிய எந்தத் திட்டங்களும் இல்லை. விவசாய விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்யும் சட்டபூர்வ நிர்வாக ஏற்பாடு உருவாக்கப்படவில்லை. பண வீக்கத்தை கணக்கிட்டுப் பார்த்தால் ஒன்றிய அரசு 7 விழுக்காடு இந்தியா வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது என்ற புள்ளி விவரம் நம்பக் கூடியதாக இல்லை. 'இந்தியாவில் தயாரிப்போம்' என்ற திட்டம் என்ன ஆனது என்பதே தெரியவில்லை.

வருமான வரியில் சலுகைகள் அறிவிக்கப்படவில்லை. வருமான வரி விகிதங்களில் எந்த மாற்றங்களும் இல்லை. நதிநீர் இணைப்புத் திட்டங்கள் இல்லை. வேளாண் சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள் இல்லை.

**11 ஆண்டு கால ஆட்சியில் என்ன சாதித்தோம் என்பது இல்லை. இனி என்ன சாதிக்கப் போகிறோம் என்பதும் இல்லை.**

பிரதமர் மோடியை நோக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டார்கள்.

**"தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் கல்வி நிதி எப்போது வரும்? உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்? மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் புதிய திட்டம் எப்போது கைவிடப்படும்? பத்தாண்டுகளாக 'இன்ச் இன்ச்'சாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைத்து வரும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை என்ற எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்? இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?"** என்று கேள்வி எழுப்பினார் முதலமைச்சர். இவை எதற்கும் நிதிநிலை அறிக்கையில் பதில் இல்லை.

இப்படி மொத்தமும் இல்லை… இல்லை… இல்லை!!!

நிர்மலா சீதாராமன் திருக்குறளைச் சொல்லாவிட்டாலும் நமக்கு ஒரு குறள் நினைவுக்கு வருகிறது…

**நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாடொறும் நாடு கெடும்.**

(ஆட்சியினால் விளையும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளாத அரசு அமைத்த நாடு சீர்குலைந்து போய்விடும்)



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.2.2026) முகாம் அலுவலகத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, 7.2.2026 அன்று விருதுநகரில் நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா ஆகியோர் உள்ளனர்.

## தமிழ்நாட்டிற்கான எந்த முக்கியத் திட்டங்களும் இடம் பெறவில்லை – மொத்தத்தில்

# ஒன்றிய அரசின் பட்ஜெட் ஏமாற்றம் ! ஏமாற்றம் ! ஏமாற்றம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, பிப்.3-**

**ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை பற்றி, நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "பெரிதும் எதிர்பார்த்திருந்த ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, வழக்கத்தைவிடப் பெரும் ஏமாற்றத்தை வழங்கியிருக்கிறது" எனவும் "தமிழ்நாட்டிற்கான எந்த முக்கியத் திட்டங்களும் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை" என்றும் - "தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வருவது, ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையின் மூலம் வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு :-**

தமிழ்நாட்டுக்கான சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், இந்த ஆண்டாவது, ஒன்றிய பா.ஜ.க. அரசின் கண்களுக்குத் தமிழ்நாடு தெரியும் - அவர்களது காதுகளில் நமது உரிமைக்குரல் விழும் என்று எதிர்பார்த்திருந்தோம். அந்த எதிர்பார்ப்பைப் பொய்க்கச் செய்து, ஏமாற்றத்தை வழங்கியிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

### முற்றிலும் தமிழ்நாடு புறக்கணிப்பு!

இன்று ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள், நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2026-27-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் நலன் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதோடு, ஏழைகள் - பெண்கள் - விவசாயிகள் - விளிம்புநிலை மக்கள் என எந்தப் பிரிவினருக்கும் நன்மை பயக்கும் முக்கியத் திட்டங்கள் இதில் இடம்பெறவில்லை.

மாநிலங்களுக்கான வரிப் பகிர்வு முறையில், தமிழ்நாடு உள்ளிட்ட வளர்ச்சியடைந்த மாநிலங்களை ஒன்றிய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது என்ற கருத்தை, நாம் வலுவாக முன்வைத்து வருகிறோம்.

### நிதிப் பகிர்வு சதவிகிதம்!

மொத்த வரி வருவாயில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு 41 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தப்பட வேண்டும் எனத் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் கோரிக்கை இம்முறையும் புறக்கணிக்கப்பட்டு, மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு தொடர்ந்து 41 விழுக்காடு என்ற அளவிலேயே தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது மிகுந்த ஏமாற்றத்தையே தருகிறது.

அதுமட்டுமின்றி, இந்தியப் பொருளாதார வளர்ச்சியில்,



மாநிலங்களின் பங்களிப்பை உரிய முறையில் 16-ஆவது நிதிக்குழு அங்கீகரிக்க முற்பட்ட போதும், நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தைக் கொண்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தி வரும் தமிழ்நாட்டிற்கு, நிதிப்பகிர்வு சதவீதம் இதர வளர்ச்சியடைந்த மாநிலங்களைக் காட்டிலும் குறைவாகவே அளிக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

தமிழ்நாட்டிற்கான வரிப்பகிர்வு 4.097 விழுக்காடு என்ற மிகச் சொற்ப அளவிலேயே அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இருக்கும் எனத் தெரியவருகிறது. இதன் மூலம் முதற்கட்ட மதிப்பீடுகளின்படி இதர ஒப்பிடத்தக்க மாநிலங்களைக் காட்டிலும் ஆண்டிற்குச் சுமார் 5000 கோடி ரூபாய் நிதி இழப்பு ஏற்படும். கடந்த பல ஆண்டுகளாகவே நிதிப் பகிர்வில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் நிலை, இன்று 16-ஆவது நிதிக்குழுவிலும் சரிசெய்யப்படவில்லை என்பது மிகுந்த கவலை அளிக்கிறது.

### 'ஜல்ஜீவன்' திட்டத்தை முழுவதும் முடக்க முயற்சி!

அண்மையில், சரக்கு மற்றும் சேவை வரி விதிப்புச் சீரமைப்பில் மாநிலங்களுக்கான நிதி வருவாய் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கான ஒன்றிய வரிகளின் பங்கு சுமார் 1,200 கோடி ரூபாய் அளவில் குறைக்கப்பட்டுள்ளது என்பதும் கண்டிக்கத்தக்கது.

"ஜல்ஜீவன்" குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாடு கோரியிருந்த 3,112 கோடி ரூபாய் ஒன்றிய அரசால் வழங்கப்படவில்லை என்று தொடர்ந்து நாம் வலியுறுத்தி வந்த வேளையில், 2025-26-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் 67 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த இந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் 17 ஆயிரம் கோடி ரூபாய் என ஒதுக்கப்பட்டிருப்பது இந்தத் திட்டத்தையே முழுவதுமாக முடக்குவதற்கான முயற்சி என்றே தோன்றுகிறது.

அதேபோன்று, பிரதம மந்திரியின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகக் கடந்த நிதிநிலை அறிக்கையில் 19 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவித்துவிட்டு, தற்போது திருத்திய மதிப்பீட்டில் வெறும் 11 ஆயிரம் கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கி இருக்கிறார்கள்.

அதேபோல், ஊரகப் பகுதிகளுக் கான பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்திற்கு 35,832 கோடி நிதி ஒதுக்குவதாக அறிவித்து, தற்போது 32,500 கோடி ரூபாய் என்ற அளவில் நிதி குறைக்கப்பட்டிருக்கிறது.

இதைவிட மிகப்பெரிய ஏமாற்றம் என்னவெனில், மிகுந்த ஆரவாரத்துடன் அறிவிக்கப்பட்ட 'PM Internship Scheme' திட்டத்திற்கென 10,831 கோடி ரூபாயைச் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது, ஆனால் தற்போது 2025 - 2026-ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில், வெறும் 526 கோடி என்ற சொற்ப அளவிலேயே நிதி ஒதுக்கி இருப்பதன் மூலம், இந்தத் திட்டம் மிகப்பெரிய தோல்வியைத் தழுவி இருக்கிறது என்றுதான் கருத வேண்டி இருக்கிறது.

### இன்னும் விடுவிக்காத நிதி!

இந்த நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் நலன் குறித்த திட்டங்கள் இடம்பெறும் என்று நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், புதிய திட்டங்கள் ஏதும் இடம்பெறவில்லை; மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்காததன் காரணமாக 'அனைவருக்கும் கல்வித்' திட்டத்திற்கான 3,548 கோடி ரூபாய், 'ஜல் ஜீவன்' திட்டத்தை நாட்டிலேயே நாம் சிறப்பாகச் செயல்படுத்திய போதிலும் ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்காத நிதி 3,112 கோடி ரூபாய் நிதி குறித்து எந்த அறிவிப்பும் இல்லை.

இதுமட்டுமின்றி தமிழ்நாட்டிற்கு எனப் புதிய திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பது தமிழ்நாட்டை ஒன்றிய அரசு தொடர்ந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தி வருகிறது என்பதை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது.

வழக்கமாக ஒன்றிய நிதி அமைச்சர் வழங்கும் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் திருக்குறளும் இந்த முறை இடம்பெறவில்லை. தமிழ்நாட்டிற்கான எந்த முக்கியத் திட்டங்களும் இடம்பெறவில்லை.

### மொத்தத்தில் ஏமாற்றம்! ஏமாற்றம்! ஏமாற்றம்!

இவ்வாறு தமது அறிக்கையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிபிட்டுள்ளார்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கல்பட்டு பாரதிவேலு கலைக் கல்லூரியில் சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் 219 மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, ஒன்றியக் குழுத் தலைவர் அ.கலைகுமார், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி அசோகன், கல்லூரி நிறுவனர் ஏ.கே. சரத், மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், சரத், விவேக் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.